சுருக்கம்

வேளாண்மை – வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, நவ்லாக் அரசு விதைப்பண்ணை பணியாளர் குடியிருப்பு கட்டடங்கள் கட்ட நிர்வாக ஒப்புதல் வழங்கியது – கூடுதலாக செலவினம் மேற்கொள்ளப்பட்ட ரூ.59,669/–யை சேர்த்து ரூ.3,89,669/–க்கு திருந்திய நிர்வாக ஒப்புதல் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (எவி) துறை

அரசாணை (2ப) எண்.222 நாள். 18.12.2019.
திருவள்ளுவர் ஆண்டு 2050,
மார்கழி–2.

படிக்க:

1 அரசு ஆணை (நிலை) எண்.2215, வேளாண்மைத் (வே.உ.3) துறை, நாள்: 23.11.1976.
2 அரசு செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை–9–க்கு முகவரியிடப்பட்ட பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் கடித எண். AEE /T.11-B/54932–2000. நாள்: 10.10.2008.
3 வேளாண்மை இயக்குநரின் கடித எண். விதைகள் 2/ 138953/ 2004, நாள்: 31.03.2009, 28.08.2009, 06.06.2011, 08.04.2015. 15.06.2019 (ம) 05.07.2019.
4 அரசு கடித எண் 25477/எவி/2008–1, நாள்: 22.07.2008 மற்றும் 16.05.2011.
5 அரசு நேர்முக கடித எண். 25477/எவி/2008–5, நாள்: 12.11.2008 மற்றும் 02.08.2013.
6 அரசு நேர்முக கடித எண். 24811/எவி/2013–2, நாள்: 16.09.2014, 06.09.2016, 05.06.2018, மற்றும் 25.06.2019.

********

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பிறவற்றுடன், வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, நவ்லாக் மாநில அரசு எண்ணெய் விதைப்பண்ணையில் பணிபுரியும் அலுவலர்/ பணியாளர்களுக்கு ரூ.3.00 இலட்சம் செலவினத்தில் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கண்காணிப்பு பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்களின் கடித எண். உ3/ககாபொ/சிகவ/ 77–78–இன்படி மேற்படி ஒப்புதல் வழங்கப்பட்ட செலவினத் தொகைக்கு 10% தொகை

(த.பி.பா.)

கூடுதலாக சேர்த்து அதாவது ரூ.3.30 இலட்சத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது உட்பட மொத்தம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகையான ரூ.3.30 இலட்சத்தை விட கூடுதலாக செலவிடப்பட்ட ரூ.59,669/–ஐயும் சேர்த்து மொத்த செலவினத் தொகை ரூ.3,89,669/–க்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்குமாறு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் வேளாண்மை ஆணையர் கோரினார்.

2. மேலும், வேலூர் மாவட்டம், நவ்லாக் அரசு விதைப் பண்ணையில் குடியிருப்பு கட்டட பணியில் கூடுதலாக செலவு செய்யப்பட்ட தொகை ரூ.59,669/–, பின்வரும் கணக்கு தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்றும் வேளாண்மை ஆணையர் தெரிவித்துள்ளார். "505 Capital Outlay on Agriculture Seeds-II Schemes in Fith five year plan – JA Estimate of States Seeds Farm DPC.No.505 A JAO". மேற்படி கூடுதலாக செலவிடப்பட்ட தொகை இதர வேளாண்மைத் துறை சார்ந்த பணிகளில், நிதி ஒதுக்கீட்டில் ஏற்பட்ட சேமிப்புத் தொகையின் மூலம் நேர்செய்யப்பட்டுள்ளதாகவும், செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, வேலூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் வேளாண்மை ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இதுகுறித்த 2003–2004–ஆம் ஆண்டு தணிக்கை தடைப் பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நேர்வில், கூடுதல் செலவினத்திற்கு திருந்திய நிர்வாக அங்கீகாரம் மட்டுமே தேவைப்படுவதாலும், இந்நிர்வாக ஒப்புதல் வழங்கும் பட்சத்தில், நிதி ஒதுக்கீடோ மற்றும் கடன் சான்றோ ஏதும் தேவைப்படாததாலும், அரசுக்கு எவ்வித நிதி இழப்பும் இல்லை என்பதாலும் இந்நேர்வில் ஏற்கனவே மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட தொகை மற்றும் அதற்கு 10% தொகையினை கூடுதலாகச் சேர்த்து தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மொத்த தொகையான ரூ.3.30 இலட்சத்தை விடக் கூடுதலாக செலவிடப்பட்ட தொகை ரூ59,669/–ஐ சேர்த்து ரூ.3,89,669/–க்கு திருந்திய நிர்வாக ஒப்புதல் வழங்கிடுமாறு வேளாண்மை ஆணையர் அரசினை கோரியுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்தபின், அதனை ஏற்க முடிவு செய்துள்ளது. அதன்படி வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை, நவ்லாக் மாநில அரசு எண்ணெய் விதைப்பண்ணையில் பணிபுரியும் அலுவலர்/ பணியாளர்கள் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணிக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.3.00 இலட்சத்துக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, கண்காணிப்பு பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை–5 அவர்களால் 10% கூடுதலாக அதாவது ரூ.3.30 இலட்சத்திற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதையும் சேர்த்து மொத்தம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட ரூ.3.30 இலட்சத்தை விட கூடுதலாக செலவிடப்பட்ட தொகையான ரூ.59,669/–ஐ சேர்த்து மொத்தம் ரூ.3,89,669/–க்கு (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்தொன்பது மட்டும்) திருந்திய நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா)

5. இவ்வரசாணை, நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா. எண்.53519/ நிதி (வேளாண்மை) துறை/2019, நாள். 05.12.2019 பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை –5
தலைமைப் பொறியாளர், (கட்டடங்கள்), பொதுப்பணித் துறை, சென்னை–5
மாநில கணக்காயர், சென்னை–18
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
நகல்
கண்காணிப்பு பொறியாளர், பொதுப்பணித் துறை, சென்னை–5
செயற்பொறயாளர், பொதுப்பணித் துறை, (கட்டடம்) வேலூர்.
பொதுப்பணித் (Y–2) துறை, சென்னை–9.
நிதி (வேளாண்மை) துறை, சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்
அவர்களின் சிறப்பு செயலர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மை (அ.ந.மு.3) துறை, சென்னை–9.
அரசு ஆணை (நிலை) எண்.2215, வேளாண்மை துறை, நாள் 23.11.1976
உதவி நிரலர், வேளாண்மைத் துறை,
இருப்பு கோப்பு/ உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

18/12/19
பிரிவு அலுவலர்